[11th March 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நம் நாட்டில்கூட அப்படிப்பட்ட ஏரோப்ளேன் இருக்கிறது. அது மத்திய சர்க்காரிடம் இருக்கிறது. அதிகமான பரப்புள்ள நிலங்களுக்குத்தான் அதை உபயோகித்து பிரயோசனப்படுத்தலாமேயொழிய 60 அல்லது 70 ஏக்கர் பரப்புள்ள நிலங்களுக்கு அது பிரயோசனம் இல்லை. அதற்கு அப்படிப்பட்ட ஏரோப்ளேனை உபயோகப்படுத்த முடியாது.

SRI T. KARIA GOUNDER : இந்த பூச்சி இப்படி பரவுவதற்கு ரசாயன உரம் போடுவதுதான் காரணமா, அதுதான் காரணம் என்று பேசப்படுகிறது. இதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படி இருந்தால் அதைப்பற்றி என்ன ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரசாயன உரம் போடுவதால் பயிர் செழிப்பாக வளருகிறது. பயிர் செழிப்பாக இருந்தால் அதற்கு பூச்சி வருகிறது. அந்த வகையில் தான் பூச்சி வந்து பரவுகிறது.

Sale of pesticides

* 709 Q.—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Home be pleased to state the amount allotted for the sale of pesticides at concession rates for each district in 1958–59?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The answer[a] is placed on the table of the House.

SRI A. GOVINDASAMY : கடலூர் ஜில்லா விவசாய ஆபீசுக்கு அதிகப்படியான தொகை ஒதுக்கப்படவில்லை என்று தெரிய வருகிறது. அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி தனி கேள்வி கேட்டால் நான் பார்த்து பதில் சொல்லுகிறேன். அது எனக்கு இப்பொழுது புரியவில்லை.

SRI A. A. RASHEED : In the statement placed on the table of the House, I find that there is an original allotment of only Rs. 10,000 for North Arcot district. May I know why no additional allotment has been made for that district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, if there is need, additional allotment is made. If there is no additional allotment made, it means that there is no large scale damage on account of pests.

SRI A. GOVINDASAMY : தேசீய விஸ்தரிப்பு திட்டம் இருக்கும் பகுதிகளில் இதை குறைந்த விலைக்குக் கொடுக்க ப்ளாக் டெவலப்மெண்ட் அதிகாரிகள் மூலமாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர்கள் விவசாய இலாகாவுடன் ஒத்துழைத்து எந்த வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

SRI S. M. ANNAMALAI : அதிகாரிகளுக்கு ஏதாவது கோரிக்கை வந்தால் இந்த பூச்சி மருந்துகளை இனாமாகக் கொடுக்க முன் வருவார்களா? ஒரு நிலத்திற்கு பூச்சி மருந்தை அடித்தால் அந்த நிலத்திலிருந்து

[a] Printed as Appendix VI on page 96 infra.

11th March 1959]

மற்றெரு நிலத்திற்குப் பூச்சி போய் விடுகிறது. அந்த நிலைமையின் காரணமாக ஒரே சமயத்தில் எல்லா நிலங்களுக்கும் பூச்சி மருந்துகளை அடிக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இம்மாதிரி எல்லா நிலங்களுக்கும் அரசாங்கமே உபயோகிக்கக்கூடிய திட்டம் இல்லை. இப்பொழுது பூச்சி மருந்துகள் பாதி விலைக்குத்தான் கொடுக்கப்படுகிறது. இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்ற யோசனை இல்லை. அம்மாதிரியான கோரிக்கையும் வரவில்லை.

Pest attack on betel vines

* 710 *Q.*—**Sri M. KALYANASUNDARAM** : Will the Hon. the Minister for Home be pleased to place on the table of the House a statement detailing the progress made in investigating the remedial measures for betel vines against pests in the State and the total amount spent during the current year for the investigation?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The answer[a] is placed on the table of the House.

Sri M. KALYANASUNDARAM : எவ்வளவு வருஷ காலமாக இந்த ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இன்னும் எவ்வளவு நாளைக்கு இந்த ஆராய்ச்சி நடைபெறும் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : 1956–57-ல் தொடங்கி இன்னும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இது ஒரு கஷ்டமான ஆராய்ச்சி. மூன்று வருஷ காலமாக இது ஆராய்ச்சி செய்யப்பட்டு இப்பொழுது முடியும் தருவாயில் இருக்கிறது. சில முடிவுகளும் ஏற்பட்டிருக்கின்றன.

Sri K. ANBAZHAGAN : பாண்டமங்கலம் வெற்றிலைக் கொடிக்காலில் ஆராய்ச்சி நடத்தப்பட்டு வரும்போது அங்கே பூச்சி விழுந்து எல்லாம் காய்ந்துபோய்விட்டது. அந்த ஆராய்ச்சி பண்ணையிலிருந்து நிறைய பூச்சி கிளம்பி அந்த வட்டாரம் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதையெல்லாம் தவிர்ப்பதற்குத்தான் ஆராய்ச்சி நடைபெறுகிறது. அங்கே பூச்சி வரவில்லை என்றால் ஆராய்ச்சிபண்ணி பயன் இல்லை (சிரிப்பு). பூச்சி இல்லையானால் ஆராய்ச்சி பண்ணுவது பயன் இல்லாமல் போய்விடும். பூச்சி வருவது நல்லதுதான்.

Sri A. VEDARATHNAM : ஆராய்ச்சியின் பயனாக சில முடிவுகள் ஏற்பட்டிருப்பதாக கனம் மந்திரி அவர்கள் கூறினார். அந்த முடிவுகள் என்ன என்பதை அறிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : போர்டோ மிக்ஸ்சர் தெளிப்பதால் நல்ல பலன் கிடைக்கிறது என்பது ஒரு முடிவு. பச்சைக் கொடி, கற்பூரக்கொடி போன்றவைகள்தான் இப்படிப்பட்ட வியாதிகளுக்கு ஆளாகின்றன என்பது மற்றொரு முடிவு.

Dispensary at Kulasekaram

* 711 *Q.*—**Sri T. T. DANIEL** : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have a scheme to raise the dispensary at Kulasekaram (Kanyakumari district) to the status of a hospital; and

---

[a] Printed as Appendix VII on pages 97 infra.